# ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி

## இரண்டாம் திருமொழி - நாமமாயிரம்
## இடைப் பெண்கள் சிற்றில் சிதைக்க வேண்டா என்று கண்ணனை வேண்டுதல்

** நாமம் ஆயிரம் ஏத்த நின்ற * நாராயணா! நரனே! * உன்னை
மாமி தன் மகனாகப் பெற்றால் * எமக்கு வாதை தவிருமே **
காமன் போதரு காலம் என்று * பங்குனி நாள் கடை பாரித்தோம் *
தீமை செய்யும் சிரீதரா! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 1

இன்று முற்று முதுகு நோவ * இருந்து இழைத்த இச்சிற்றிலை *
நன்றும் கண்ணுற நோக்கி * நாங்கொளும் ஆர்வம் தன்னைத் தணிகிடாய் **
அன்று பாலகனாகி * ஆலிலை மேல் துயின்ற எம் ஆதியாய்! *
என்றும் உன்தனக்கெங்கள் மேல் * இரக்கம் எழாததெம் பாவமே 2

குண்டு நீர் உறை கோளரீ! * மத யானை கோள் விடுத்தாய் * உன்னைக்
கண்டு மால் உறுவோங்களைக் * கடைக்கண்களால் இட்டு வாதியேல் **
வண்டல் நுண்மணல் தெள்ளி * யாம் வளைக் கைகளால் சிரமப்பட்டோம் *
தெண்திரைக் கடற் பள்ளியாய்! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 3

பெய்யு மாமுகில் போல் வண்ணா! * உன்தன் பேச்சும் செய்கையும் * எங்களை
மையல் ஏற்றி மயக்க * உன் முகம் மாய மந்திரம் தான் கொலோ? **
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு * உன்னை நோவ நாங்கள் உரைக்கிலோம் *
செய்ய தாமரைக் கண்ணினாய்! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 4

வெள்ளை நுண்மணற் கொண்டு * சிற்றில் விசித்திரப்பட * வீதி வாய்த்
தெள்ளி நாங்கள் இழைத்த கோலம் * அழித்தியாகிலும் உன்தன் மேல் **
உள்ளம் ஓடி உருகல் அல்லால் * உரோடம் ஒன்றும் இலோம் கண்டாய் *
கள்ள மாதவா! கேசவா! * உன் முகத்தன கண்கள் அல்லவே 5

முற்றிலாத பிள்ளைகளோம் * முலை போந்திலாதோமை * நாள் தொறும்
சிற்றில் மேல் இட்டுக் கொண்டு * நீ சிறிதுண்டு திண்ணென நாம் அது
கற்றிலோம் ** கடலை அடைத்து அரக்கர் குலங்களை * முற்றவும்
செற்று * இலங்கையைப் பூசல் ஆக்கிய சேவகா! * எம்மை வாதியேல் 6

பேதம் நன்கறிவார்களோடு * இவை பேசினால் பெரிதின்சுவை *
யாதும் ஒன்றறியாத பிள்ளைகளோமை * நீ நலிந்தென் பயன்? **
ஓத மாகடல் வண்ணா! * உன் மணவாட்டிமாரொடு சூழறும் *
சேது பந்தம் திருத்தினாய்! * எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 7

வட்ட வாய்ச் சிறு தூதையோடு * சிறு சுளகும் மணலும் கொண்டு *
இட்டமா விளையாடுவோங்களைச் * சிற்றில் ஈடழித்தென் பயன்? **
தொட்டுதைத்து நலியேல் கண்டாய் * சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய்! *
கட்டியும் கைத்தால் இன்னாமை * அறிதியே கடல் வண்ணனே! 8

முற்றத்தூடு புகுந்து * நின் முகம் காட்டிப் புன்முறுவல் செய்து *
சிற்றிலோடெங்கள் சிந்தையும் * சிதைக்கக் கடவையோ? கோவிந்தா! **
முற்ற மண்ணிடம் தாவி * விண்ணுற நீண்டளந்து கொண்டாய்! * எம்மைப்
பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் * இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்? 9

** சீதை வாய் அமுதம் உண்டாய்! * எங்கள் சிற்றில் நீ சிதையேல் என்று *
வீதி வாய் விளையாடும் * ஆயர் சிறுமியர் மழலைச் சொல்லை **
வேத வாய்த் தொழிலார்கள் வாழ் * வில்லிபுத்தூர் மன் விட்டுசித்தன் தன் *
கோதை வாய்த் தமிழ் வல்லவர் * குறைவின்றி வைகுந்தம் சேர்வரே 10

**ஆண்டாள் திருவடிகளே சரணம்**

---